# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1681/33 - 2010 නොවැම්බර් 24 වැනි බදාදා - 2010.11.24

*1681/33 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2009 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டத்தில் கடைசியாக திருத்தப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப, நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இந்தக் கட்டளையின் மூலம் இயைபு முறை பட்டியல் தலைப்பு இலக்கம் 30.01, 30.02, 30.03, 30.04, 30.06 ஆகியவற்றின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்தாக்கத்திற்கு தேவையான உற்பத்தி பொருட்களுக்கு 27.14 இ. ப. த. பெ. மற்றும் 2713.20 இ. மு. குறியீட்டின் கீழ் தார் பொருட்கள், 8805.21 மற்றும் 8805.29 இ. மு. குறியீட்டின் கீழ் விமானங்கள் உந்திகள் மற்றும் உதிரிப்பாகங்கள், 8803.30 இ. மு. குறியீட்டின் கீழ் விமானங்கள் அல்லது உலங்கு வானூர்திகள் என்பவற்றின் உதிரிப்பாகங்கள், 8411.91 இ. மு. குறியீட்டின் கீழ் டோர்போ ஜெட்கள் அல்லது டோர்போ ப்ரோபல்லர்கள் 2010, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் துறைமுகம் மற்றும் விமான நிலைய அபிவிருத்தி வரி அறவீடு செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்படுகிறது என பிரகடனப்படுத்துகிறேன்.*

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,
2010, நவெம்பர் 24.

12-702/1

---

பிழைதிருத்தம்

### 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்

2 (1) ஆ (i) மற்றும் (ii) ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2010.11.19 ஆந் திகதிய 1680/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பகுதி I: தொகுதி I- பொது இல் பிரசுரமான அறிவித்தலில் அதன் கடைசி வரியில் காணப்படும் "வெளியிடப்பட்ட கட்டளையினை இத்தால் நீக்குகிறேன்" என்பது "வெளியிடப்பட்ட கட்டளையினை 2011, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வண்ணம் இத்தால் நீக்குகிறேன்" என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.*

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதி செயலகம்,
கொழும்பு 01,
2010, நவெம்பர் 24.

12-702/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.